547

கும்பகோணம் விவசாய சங்கத்தின் மாஸாந்திரப் பத்திரிகை.

வாலியம் 12] 1918-ஆம் செப்டம்பர் [நெ. 9

MONTHLY JOURNAL OF 8 PAGES

EDITED BY

Mr. R. Srinivasa Iyengar B. A. and Mr. A. Subramania Iyer, B. A.

Annual Subscription is One Rupee Post Free.

கம்போடியாபருத்தி இது மணிலாக்கொட்டை பயிருடன் கால்மாறி செய்யக்கூடிய பயிரென்று பாலூர் விவசாயபண்ணையில் செய்த பரீக்ஷைகளின் அநுபோகத்தில் தெரிந்த விஷயம்.

ஒரே நிலத்தில் வருஷாவருஷம் மணிலாக்கொட்டைப் பயிரையே செய்யாமல் வேறுபயிர் செய்யவேண்டுமென்கிற விஷயத்தைக் குறித்து 1917-18-ம் வருஷத்திய விவசாய பஞ்சாங்கத்தில் 32-வது பக்கத்தில் விவரமாய் எழுதப்பட்டிருக்கிறது. வருஷாவருஷம் அதே இடத்தில் இடைவிடாமல் மணிலாக்கொட்டைப் பயிரையிட்டால் அப்படிப் பயிர் செய்த கொட்டையின் மாறுதலும் தினுசின் ஸ்ரேஷ்ட குறைகுணங்களும் நாளுக்குநாள் கேவலமாய்ப்போகிறதென்கிற விஷயம் எல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயம். ஆகையால் சரியான பயிரை மணிலாக்கொட்டையுடன் மாறிமாறிப் பயிர் செய்யவேண்டியது அவசியம். இப்படிச் செய்யும் பயிர்கள் தக்கதாயிருக்கவேண்டியது மெத்த அவசியம். ஏனென்றால், தக்க லாபம் கொடுக்கும் மணிலாக்கொட்டை பயிரை செய்து வழக்கமான தென் ஆர்காடு ஜில்லா கிருஷிகளுக்கு லாபங் கொடுக்காத பயிரை பயிர்மாற்றி சாகுபடிசெய்யும்படி போதித்தால் கையாடமாட்டார்கள். பாலூர் விவசாய பண்ணையில் இது விஷயமாய் பரீக்ஷை செய்துபார்த்த அனேக பயிர்களில் கம்போடியா பருத்தி தற்காலத்தில் அனேகமாய் திருப்திகரமான பயிரென்று சொல்லக்கூடும். 1910-11-ம் வருஷத்திலிருந்து ஒரு ஏக்ரா கம்போடியா பருத்தி பாலூர் விவசாயபண்ணையில், சாகுபடி செய்ய பிடித்த செலவும் அதிலிருந்து உற்பத்தியான பருத்தியின் அளவும் அது விற்ற கிரயமும் இதனடியில் காட்டியிருக்கிறது:—

8-11-18

வருஷம்.	ஒரு ஏகராவிலிருந்து கிடைத்த பருத்தியின் நிறைஇராத்தல்.	ஒரு ஏகராவிலிருந்து உற்பத்தியான பருத்தியின் கிரயம்.			ஒரு ஏகரா பருத்தி சாகுபடிசெய்ய இட்டுபடியான செலவு.		
		ரூ	அ	ப.	ரூ.	அ.	ப.
1910—11 ...	1,388	196	10	10	32	11	0
1911—12 ...	1,405	92	12	5	41	8	0
1912—13 ...	757½	65	2	4	30	5	7
1913—14 ...	961	124	5	7	77	0	11
1914—15 ...	523	52	4	9	47	7	6
1915—16 ...	304	39	1	0	53	2	10
1916—17 ...	1,328	156	1	1	49	2	5
1917—18 ...	631	136	5	1	67	4	4
மொத்தம் ...		862	11	1	398	10	7
சராசரியில் ...		107	13	5	49	13	4

பாலூர் விவசாயபண்ணையில் மணிலாக்கொட்டை பயிர்செய்த நிடத்திலேயே மறபடி மணிலாக்கொட்டை சாகுபடிசெய்யும்போது கிடைத்த மாசூலைவிட, கம்போடியா பருத்திக்குப் பின் தனி மணிலாக் கொட்டையாவது அல்லது மணிலாக்கொட்டையும் ராகியும் கலந்த பயிராவது செய்தால் ஜாஸ்தி மாசூல் கொடுத்திருக்கிறது. கம்போடியா பருத்தி பயிர் சால் சாலாய் விதைப்பதால் இப்பயிருக்கு சால்களுக்கு ஊடே களை வெட்டவும் பயிரோட்டவும் ஜாஸ்தி சௌகரியம் ஏற்படுகிறது. தென்னாற்காடு ஜில்லாவில் இறவைப் பயிர் சாகுபடி செய்யுமிடங்களில் ஜாஸ்தியாய் கோரை, களை முதலியவைகள் முளைத்து அவைகளை அப்புறப்படுத்த கிருஷிகர் படும் கஷ்டமும் தொந்திரவும் இப்பயிருக்கு அவ்வளவாய் நேரிட இடமில்லை. ஏனென்றால் இப்பயிருக்கு மற்ற இறவைப்பயிர்களைப்போல அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச வேண்டிய அவசியமில்லை. தண்ணீர் அடிக்கடி எப்போது இந்த கம்போடியா பயிருக்கு இறைக்கவேண்டிய அவசியமில்லையோ அப்போது அந்நிலத்தில் ஜாஸ்தி களைமுளைக்க இடமில்லாதிருப்பதுடன் கொஞ்சங் கொஞ்சம் முளைத்த களைகளையும் லேசாய் அப்புறப்படுத்த வசதிகளுமிருக்கின்றன. இப்பயிருக்கு அடிக்கடி தண்ணீர் பாய்ச்சவேண்டிய அவசியம் ஏற்படாததாலும் இப்பயிர் செய்தநிலம் அடிக்கடி களைவெட்டி பயிரோட்டக்கூடியதாயிருப்பதாலும் இப்பயிரிட்ட நிலம் சோலை உழவுசெய்த நிலம் ஏற்பட்டிருக்குமோ அப்படியிருக்கும், இப்படி நிலம் சுத்தமாயும் அடிக்கடி பயிரோட்டப்பட்டு மிருப்பதால் இதே நிலத்தில் இப்பயிருக்குப் பின் செய்யும்பயிர் நன்றாய் பலிக்கிறது. அனேகமாய் சற்று களர் வாட்டமாயிருக்குமிடங்களிலுங்கூட பயிருக்கு

ஜாஸ்தி தண்ணீர் பாய்ச்சபடாததாலும், அடிக்கடி பயிர் ஓட்டப்படுவதாலும் களர் பூத்து மேல்வராமல் குறைய ஏதுவிருக்கிறது. தென் ஆற்காடு ஜில்லாவில் எங்கெங்கே மணிலாக்கொட்டை இறவைப்பயிராய் சாகுபடி செய்கிறார்களோ அவ்விடங்களிலெல்லாம் மேல் குறித்த அனுகூலங்களிருப்பதால் கம்போடியா பருத்தி மணிலாக்கொட்டையுடன் மாறிமாறிப் பயிர்செய்ய மெத்தவும் லாயக்கான பயிர்.

கம்போடியா பருத்தியும் மணிலாக்கொட்டையும் வெவ்வேறு வகுப்பைச்சேர்ந்த பயிர்களே. கம்போடியா பருத்தியின் வேர் பூமியின் கீழ்ழாடி பரவி பூசாரம் கிரகிக்கிறதற்கும் மணிலாக்கொட்டைப் பயிர் வேர்பரவி சாரமிழுப்பதிலும் மெத்த வித்தியாசமிருக்கிறது. ஆகையால் கம்போடியா பருத்தி மணிலாக்கொட்டைப் பயிருக்குப் பின் காலமாறி சாகுபடிசெய்ய நல்லபயிர். மற்ற இறவைப்பயிர்களைக் கிருஷிகர் பயிர் செய்யும்போது கிணறுகளில் கவலையும் ஏற்றமும் இடைவிடாமல் தினசரி ஆடிக்கொண்டே இருக்கவேண்டும். ஆனால் கம்போடியா பயிருக்கோ அப்பிரகாரம் வேண்டியதில்லை. ஜாஸ்தி இறவையாகும் போது கூலியாள் தினசரி வேண்டியிருக்கும் கம்போடியாவுக்கோ ஜாஸ்தி ஆள் தண்ணீர் இறைக்கப் பிடிக்காது. ஏனென்றால் இதற்கு ஜாஸ்தி தண்ணீர் மற்ற இறவைப் பயிர்களைப்போல் வேண்டியதில்லை. மேலும், பருத்தி வெடிக்கும் காலம் மணிலாக்கொட்டை பொறுக்கும் காலத்தில் ஏற்படாததாகையால், பருத்தி வெடிக்கும்போது அதை எடுக்க ஆள் கிடைக்காமல் மாசூல் நஷ்டமடைய இடமில்லை. பருத்தி வெடிக்கும் காலத்தில் மற்ற வேலைகளில்லாமலிருக்குமாகையால் குறைந்த கூலிக்கு ஏராளமாய் பெண்கூலியாட்கள் வேலைசெய்ய கிடைக்கும்.

கம்போடியா பருத்தி சாகுபடிசெய்ய உத்தேசிக்கும் இடத்தை சரியானபடி எருச்செய்து விதைக்கவேண்டும். ஏனென்றால் இப்பருத்தியின் வேர் மற்ற தினுசு பருத்திகளின் வேரைப்போல ஆழத்திற் செல்லாமல் மேலிட்டாற்போலே பரவும் குணமுடையது. செப்டம்பர் மாதத்தில் விதைவிதைக்கவேண்டும். இல்லாவிட்டால் அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்யும் பெருமழைகளில் விதையழுகி முளைக்க இடமிராது. முளைத்த இளஞ்செடிகளும் கெட்டுப்போகும். $2\frac{1}{2}$ முதல் 3 அடிக்கு சால் சாலாய் விதைக்கவேண்டும். செடிகளுக்கு ஊடே $2\frac{1}{2}$ முதல் 3 அடி இடை இருக்கும்படி விதைக்கவேண்டும். செடிகள் முளைத்து வரும்போது வீரியமாய் வளரும் வண்ணம் ஏகரா ஒன்றுக்கு 112 முதல் 224 இராத்தல்வரை பிண்ணாக்கை தூள்செய்து விதையுடன் கலந்தாவது அல்லது தனியாயாவது விதைக்கும் சமயத்தில் உபயோகிக்கவேண்டும் விதைகள் ஒரு அங்குல ஆழத்துக்குமேல் புதையவிடக்கூடாது. பெருமழை அடித்து ஓய்ந்தபின் ஒருதரம் மண் வெட்டிகளை ஓட்டி நெருங்கியிருக்கும் பயிரை கலைத்துவிடவேண்டும். இதற்கு அப்பால் மேல்மண் இறுகிக் கெட்டியாய்ப்போகாமலும் களையில்லாமலும் அடிக்கடி பயிரோட்டிகொண்டிருக்க வேண்டியதைத் தவிர வேறில்லை. தென் ஆற்காடு ஜில்லாவில் மழையில்லாத சந்தர்ப்பங்களில் மாதம் ஒரு தண்ணீர் இறைத்தால் போதுமானது. மொத்தத்தில் இப்பயிருக்கு 4 தண்ணீருக்குமேல் தேவையிராது. இப்பயிர் சால் சாலாய் பயிர் செய்யப்படுவதாலும் ஒரு களைவெட்டியபின் மண் அணைக்

சப்படுவதாலும் பயிரிருக்குமிடம் முகடுகளாகவும் இரண்டு வரிசைக்கு நடுவில் கால்களாயுமிருக்கும். ஆகையால் தண்ணீரும் பயிருக்குச் சமபத்தில் பாய்வதுடன் ஜாஸ்தி தண்ணீரும் பிடிக்காது.

ஜே. செல்வரங்க ராஜா,
ஆக்டிங் விவசாய டெப்டி டைரெக்டர்,
4-வது சர்க்கில், பறங்கிமலை.

சர்க்கார்பருத்தி 55-வது பக்கத்தொடர்ச்சி:—

மறுபடி அவையெல்லாம் நூல் நூற்பதற்கும் சிறந்தவைகளா என்று சோதித்து நூற்பதற்கு மிகச் சிறந்ததாகவும், அதிக மகசூல் கொடுக்கக்கூடியதும், நீண்ட இழையுள்ள வன்மையான பஞ்சு உள்ளதும், பஞ்சு அதிகம் கட்டுகிறதுமானவைகளை கடைசியில் பொறுக்கி எடுத்துக்கொண்டார்கள். இவ்விதமாய்க் கிடைத்த விதையைத்தான் "சர்க்கார்பருத்தி" என்று வெளியில் விற்பனை செய்தார்கள். நாட்டு பருத்தியிலிருந்து பொறுக்கி எடுத்திருப்பதால் அதைப்போலவே இந் நாட்டு சீதோஷ்ணம், பூவளம் முதலியவெல்லாம் இசைந்து ஒத்துக் கொள்வதோடு, அதின் சில விசேஷ குணத்திற்காகத் தெரிந்தெடுக்கப் பட்டிருப்பதால் அதிலும் இது சிறந்த மகசூலைத் தரும் என்பது இதனால் தெரிகிறது.

கர்நூல் ஜில்லாவில் "சர்க்கார் பருத்தி" என்று சொல்லப்பட்ட விற்பனையாகிற பருத்தி, உள்ளூர் பருத்திபோன்று அவ்வளவு நல்ல மகசூலைத் தருவதுடன், அதைவிட அதிகமான பஞ்சு கட்டுமானமுள்ள தாயிருக்கிறது. அதாவது முன் நூற்றுக்கு 25 பங்கு பஞ்சு கொடுத்ததி லின்று நூற்றுக்கு 30 பங்கு பஞ்சு கட்டுமானமுள்ளதாயிருக்கிறது. 1917-18 வருஷத்தில் இவ்விதை 60,000 றாத்தல் விற்பனையாயிருக் கிறது.

பல்லாரியிலும் இதைப்போன்ற பருத்தி உள்ளூர் பருத்தி அவ்வளவு மகசூல் கொடுக்கக்கூடியதாயும் ஆனால் கட்டுமானம் ஜாஸ்தியாயுள்ள தாயும் (நூற்றுக்கு 25 லிருந்து 30 பங்கு) ஆன பருத்தியை விளைவித் திருக்கிறார்கள்.

இந்த விதையை முதல் பயிரிட்டுப்பார்க்க எண்ணமுள்ள குடியானவர்கள் சர்க்கார் டிபோக்களிலிருந்தாவது சர்க்கார்பண்ணையிலிருந்தாவது வாங்க ஏற்பாடு செய்துகொள்ளவேண்டியது. பின் அதை அலாதியாய் வைத்திருந்து வேறொன்றோடும் கலந்துவிடாமல் ஒரு நிலத்தில் விதைக்கவேண்டும். அவரவர்கள் ஊர்ப்பருத்தியைவிட இது சிலாக்கியமென்று கண்டு அதிக விஸ்தீரணத்தில் பயிர்செய்யவேண்டுமென்றிருந்தால் திரும்பவும் சர்க்கார் டிபோக்களிலிருந்து விதைவாங்க ஏற்பாடு செய்யவேண்டும். அல்லது தாங்கள் பயிரிட்டிருக்கும் நிலத்தின் மத்தியில் ஒரு பாகத்தைப் பிரித்துக்கொண்டு அதில் விளைகிற பருத்தியை தனியாக எடுத்துவைத்திருந்து அரைத்து அந்தவிதையைத் தங்களுக்கு மற்ற நிலங்களில் விளைந்துவரும் வேறு பருத்திகளின் விதையோடு கலந்துபோகாமல் பத்திரமாய் வைத்துக்கொள்ளவேண்டியது. இது போலவே தங்களுக்கு பருத்தி பயிரிடும் எல்லா விஸ்தீரணத்திலும்

இதையே பயிரிடுவோரும் தங்கள் நிலங்களில் மத்தியிலுள்ள ஒரு பாகத்திலிருந்து பருத்தியெடுத்து அரைத்து கலவனில்லாமல் வைத்துக் கொள்ளவேண்டியது. தவறினால் பிரதி வருஷமும் ஒரு கவர்ன்மெண்ட் டிப்போவிலிருந்து விதை வாங்கிகொள்ளவேண்டும்.

கம்போடியாவானாலும் சரி, சர்க்கார் பருத்தியானாலும் சரி எந்தப் பருத்திக்கும் இந்தப்படி செய்வது நல்லது. சருகு குப்பை முதலியன கலந்திருந்தால் விலை குறைந்துவிடும். தென் ஜில்லாக்களில் பருத்தி விளைகிற இடங்களிலும், கர்நூலில் ஒரு தாலுகாவிலும் காலை நேரத்தில் பருத்தி பொறுக்க ஆரம்பித்து வெய்யில் அதிகக் கடுமையாகிறபோது நிறுத்திவிடுகிறதினால் பருத்தி தூசு சருகு இல்லாமல் சுத்தமாயிருக்கிறது. அதனால் வெய்யில் எறி சருகு முதலியது உலர்ந்து பொடிந்து போகக்கூடிய சமயத்தில் பருத்தி பொறுக்க ஆரம்பித்து கடுவெய்யிலில் எல்லாம் பருத்தி எடுத்து அந்த சருகுசெத்தையெல்லாம் அநேகமாய் கலந்து பொறுக்கப்படும் வழக்கமுள்ள மற்ற வட ஜில்லாக்களிலிருந்து வருகிற பருத்தியைக்காட்டிலும் அதிக விலைக்கு இந்த நல்ல சமயத்தில் ஜாக்கிரதையாய்ப் பொறுக்கிசேகரிக்கப்பட்ட பருத்தி விற்கப்படுகிறது. பருத்தியைக் கலவனில்லாமல் விளைவித்தல், சருகு செத்தையில்லாமல் பருத்தியைப் பொறுக்கிவைத்துக்கொள்ளுதல் என்னும் இரண்டு விஷயங்களைக் கவனித்தால் இந்த ஜில்லாப் பருத்திக்கும் "பருத்தி மார்க்கெட்டில்" நல்ல பேரும் நல்ல விலையும்கிடைக்கும் என்று சம்சாரிகளுக்குத் தெரியவரும்.

பல்லாரி ஜில்லாவில் நிலமுள்ள குடியானவர்களுக்கு இந்த விதை வேண்டுமானால் ஹகரி சர்க்கார் விவசாயபண்ணை மானேஜருக்கும் கர்நூல் ஜில்லாவில் மேலே சொன்னபாகத்தில் நிலமுள்ளவர்கள் நந்தியால் சர்க்கார் விவசாயப்பண்ணை மானேஜருக்கும் மனுச்செய்துகொள்ள வேண்டியது.

இந்த தினுசு பருத்தியின் விலை, நந்தியாலில் ஒரு ரூபாய்க்கு 25 ராத்தலும், ஹகரியில் ரூபாய்க்கு 25 ராத்தலும் ஆக இருக்கிறது.

ஜி. ஆர். ஹிலசன்,
விவசாய டிப்டி டைரெக்டர்,
I, II, III சர்க்கிள்ஸ், பெல்லாரி.

குடியானவர்களுக்கு உதவி புரியும் பூச்சிகள்.

கழனிகளில் ஜீவிக்கும் சிற்சில பூச்சிகள் பிரயோஜனமானவையென்றும் வேறு சில கெடுதியுள்ளவையென்றும் பெரும்பான்மையாய் குடியானவர்களுக்கு தெரிந்திருக்காது. மாருல்களில் வந்து சேரும் ஒவ்வொரு பூச்சியும் கெடுதியுள்ளதென்று எண்ணுவது அவர்கள் வழக்கமாம் ஏனெனில் சாதாரணமாய் பூச்சிகளால் செய்யப்படும் கெடுதியைக் கண்டிருப்பார்களேயல்லாமல் அவைகளால் விளையும் நன்மையை அறியார்கள் ஆகையால் ஒவ்வொரு குடியானவனும் பூச்சிகளால் தன் பயிருக்கு சேதம் உண்டாகாமல் தடுப்பதற்கு தனக்கு உபயோகமுள்ள பூச்சிகள் எவையென்றும் தனக்கு நஷ்டத்தை விளைவிக்கும் பூச்சிகள் எவையென்றும் அறிந்திருப்பது அத்தியாவசியம். நமக்கு அனுப்பப்

படும் பார்஼லல்களில் குடியானவனுக்கு உதவியான பூச்சிகளை அவனுக்குக் கெடுதிசெய்யும் பூச்சிகளோடு சேர்ந்து அனுப்புவது வழக்கம் நுணுநுணுக்கமாய் பரிசோதிப்பதில் தேர்ச்சியடைந்திருக்கும் குடியானவன் நல்ல பூச்சிகள் எவை யென்றும் நஷ்டம் உண்டாக்கும் பூச்சிகள் எவையென்றும் அறிவதினால் அப்பூச்சிகளைத் தொலைக்கும் சுளுவான வழியொன்றை ஏற்படுத்துவான். முக்கியமாய் குடியானவனுக்கு பூச்சிகளால் உதவியுண்டென்று சொல்லுவது, தன் பயிருக்கு நஷ்டமுண்டாக்கும் பூச்சிகளைத் தொலைக்கும் வேறு பூச்சிகளின் நற்செய்கையென்று அர்த்தமாகும்.

இம்மாதிரி சகாயம் செய்யும் பூச்சிகள் மூவகைப்படும். இப்பூச்சிகள் பயிருக்கு நஷ்டமுண்டாக்கும் பூச்சிகளை அழிப்பதற்கு மூன்று உபாயங்களைக் கொண்டுள்ளன.

(a) மற்றப் பூச்சிகளையே நேரில் பிடித்து அவைகளைப் புசித்து ஜீவிப்பன. A–B படங்களில் குறிப்பிட்டிருக்கும் பூச்சிகள் இவையொத்தவை. இவைகளுள் சில எத்தவகைப் பூச்சிகள் கிடைப்பினும் அவைகளைப் புசித்துவிடுகின்றன. A (1) படத்தில் காட்டியிருப்பது இப்படிப்பட்ட பூச்சிகளில் ஒன்று. சிற்சில பூச்சிகளுக்கு ஒரே ஜாதிப் பூச்சிகளையே கொன்று தின்கும் வழக்கம். இவ்வகைப்பூச்சி B–படத்தில் காட்டியிருக்கிறது. இப்பூச்சிகள் அசுணிகளையும் இவைபோன்ற பூச்சிகளையும் பிடித்துத்தின்பவை அசுணி, பயிர்களுக்கு நஷ்டம் விளைவிக்கும் பூச்சியாதலால் இதைத் தின்று ஜீவிக்கும் பூச்சிகள் குடியானவனுக்கு விசேஷித்த விதமாய் உதவி புரிகின்றன. உதாரணமாக சோளப்பயிரில் விழும் அசுணியை அருந்தும் சிறு வண்டுகளும் அவ்வண்டுகளின் குஞ்சுகளுமாகிய புழுக்களைப்போன்ற சிறுபூச்சிகளும், இவ்வசுணிகளை ஏராளமாய் அருந்திவிடுகின்றன. இவ்விதமாய் பயிர்களில் வந்து சேரும் உருண்டை வடிவமான வண்டுகள் முக்கியமாய்க் குடியானவனுக்கு உதவி செய்யும் பூச்சிகளாகவேயிருக்கின்றன. ஆயினும் இவ்வுருண்டைப் பூச்சிகளில் ஒரு வகுப்பானது கத்தரியிலும், பாகைச் செடியிலும் அபரிமிதமாய்த் தோன்றி இலைகளைத் தின்று விடுகிறது. படத்தில் காட்டியிருக்கும் வண்டானது நெல்பயிர்களில் விழும் நாவாய்ப் பூச்சிகளைத்தின்று ஜீவிப்பது.

(b) இரண்டாவது வகுப்பிலமைந்த பூச்சிகள் மற்றப்பூச்சிகளைப் பிடித்து தத்தம் குஞ்சுகளுக்கு உணவாக சேகரித்துவைப்பவை. பலவிதக்குழவிகள் அரகுக் கூண்டுகளிலும், மண் கூண்டுகளிலும் பயிர்களைச் சேதப்படுத்தும் பற்பல புழுக்களைப் பிடித்துக்கொண்டு போய்ச் சேர்ப்பது வழக்கம். 2-வது படத்தில் காட்டியது இம்மாதிரிக் குழவியொன்று பூமியில் கூடு கட்டியிருப்பதைக்காணலாம் இப்புழுக்களைத் தாய்க்குழவி பட்சித்து விடாமல் தன் குஞ்சுகளுக்கு ஆகாரமாய் சேகரித்து வைக்கிறது வழக்கம்.

(c) இம்மூன்றும் வகுப்பைச் சேர்ந்த பூச்சிகளோவெனில் பயிர்களுக்கு சேதமுண்டாக்கும பூச்சிகளின் மேலாவது அல்லது அவைகளினுள்ளாவது ஜீவித்து அவைகளை சங்காரம் செய்யும் சிறு ஜெந்துக்கள். அவ்வித உபயோகமுள்ள பூச்சிகள் நஷ்டமுண்டாக்கும் பூச்சிகளைவிட மிக சிறியதாகவேயிருக்கின்றன. உபயோகமுள்ள பூச்சிகளின் தாய்

நஷ்டமுண்டாக்கும் பூச்சிப்புழுக்களின் மேல் அநேகம் முட்டைகளிட்டு அம்முட்டைகளிலிருந்து வெளிவரும் குஞ்சுகள் அப்பூச்சிப் புழுக்களை துளைத்து ஊடுருவி அவைகளின் உட்பாகங்களைத்தின்று இறுதியில் அவைகளைக்கொன்று விடுகின்றன. நஷ்டமுண்டாக்கும் பூச்சிகள் நாளாவட்டத்தில் இவ்விரோதிப் பூச்சிகளால் சங்காரம் செய்யப்படுகின்றன. நானாவிதப் பயிர்களுக்கு நஷ்டமுண்டாக்கும் பூச்சிகள் இத்தகையாய் உபயோகமுள்ள ஜெந்துக்களாகிய சிறு ஈக்களாலும் சிறு குழவிகளாலும் அழிக்கப்பட்டுவருகின்றன. சாதாரணமாக சோளத் தண்டிலும் நெல்தண்டிலும் துளைக்கும் புழுக்களுக்கு இவ்விதமான விரோதிப்பூச்சிகள் உண்டென்று அறிந்திருக்கிறோம். முட்டைகளும் சிறு குஞ்சுகளும் கூடவே தாக்கப்பட்டு வருகின்றன. 1, 2-வது படத்தில் காட்டியிருப்பதில் எவ்விதமாக சிறு ஈசிபோன்ற குழவியினால் தன் முட்டையை ஒரு குழவி புழுவினுள் இடுகிறதென்று தோற்றப்படுகிறது. 3-வது படமோ வென்றால் ஒரு புழுவைப் புசித்துவந்த சிறு குழவிகளைக்காட்டியுள்ளது.

குடியானவர்களுடைய கழனிகளில் எப்போதுமே இம்மாதிரியான நற்செயல்கள் புரியும் அநேகாநேகம் பூச்சிகள் உண்டு. சில வேளைகளில் இவ்விதப் பூச்சிகள் கொஞ்சமாகவிருக்கும், வேறு காலங்களில் அதிகமாகவேயிருக்கும். இவைகளால் குடித்தனக்காரருக்கு விளையும் நன்மை அதிகம். சாதாரணமாய் பயிர்களுக்கு நஷ்டம் வருவிக்கும் பூச்சிகள் அபரிமிதமாய்த் தோன்றி திடீரென்று துலைந்து விடுகிறது. இப்பூச்சிகளால்லாமல் காற்று சம்பந்தமென்றும், பகவான் செயலென்றும் அநேகங் குடியானவர்கள் சொல்லிக்கொள்வது சகஜம். ஆகையால் இவ்விதமாய் பிரயோஜனமுள்ள பூச்சிகள் எவையென்று அறிந்து அவைகளைக் கொல்லாமல் விர்த்திக்குக்கொண்டுவரும் முறையை தெரிந்துக்கொண்டு நடப்பித்த குடியானவர்களுக்கு அத்தியாவசியம். இதை அறியாமல் கெடுதிசெய்யும் பூச்சிகளுடன் உபயோகமுள்ள பூச்சிகளையும் தொலைப்பது கெடுதியான காரியம். குடியானவர்களுக்கு உதவி செய்யும் பூச்சிகள் உளவென்று அறிவிப்பதற்காக சிற்சில உதாரணங்களுடன் இதை எழுதலானேனன்றி உதவிபுரியும் எல்லாப் பூச்சிகளையும் கணக்கிட்டு இவ்விடத்தில் காட்டுவது அசாத்தியம். குடியானவர்கள் தத்தம் பயிர்களில் விழும் பூச்சிகளைக்கவனித்து அவைகளின் செய்கைகளை நுணுநுணுக்கமாய் அறிவார்களேயாகில் தங்களுக்கு உதவி செய்யும் பூச்சிகள் எவைகளென்றும், விரோதிப் பூச்சிகள் எவைகளென்றும் நன்கு அறிந்துகொள்வார்கள். பிரதேசங்களில் இத்தகையான பூச்சிசாஸ்திரம் எவ்வளவு அதிகப்பட்டிருக்கிறதென்றால், பிரயோஜனத்தை செய்யும் பூச்சிகளை தத்தம் ஊர்களுக்கு கப்பலேற்றி வெளியிடங்களிலிருந்து கொண்டுவந்துவிட்டு விர்த்திக்கச் செய்வது வழக்கமாகவேயிருக்கிறது.

T. V. ராமக்கிருஷ்ண அய்யர்,
சர்க்கார் ஆக்டிங் பூச்சிசாஸ்திரி,
கோயம்புத்தூர்.

[குறிப்பு:—மேலேகண்ட வியாசத்தில் சொல்லப்பட்ட பூச்சிப் படங்களை 1918—19 சர்க்கார் விவசாயப்பஞ்சாங்கத்தில் காணலாம்.]

சாஸ்திரப்பரிசோதனைக்கு மண் அனுப்பும் விதம்.

விவசாய டிப்பார்ட்டுமெண்டு வேலை நீங்கலாக நிலச்சுவான்தார்களும் குடியானவர்களும் அனுப்பும் மண்ணை கோயமுத்தூரிலிருக்கும் கவர்ன்மெண்டு அக்ரிகல்சரல் கெமிஸ்டு அவர்கள் (ரசாயன நிபுணர்) இனமாக பரீட்சை செய்யத்தயாராயிருக்கிறார். களிப்பான பூமியா அல்லது மணல்பாங்கா ஜலவசதியிருக்கிறதா வடிக்கால் ஏற்பட்டுள்ளதா வேளாண்மை செய்வதின் திறம் எப்படி இம்மாதிரி அநேகம் காரணங்களினால் ஒரு நிலத்தின் வளப்பம் குறிப்பிடப்படுகிறது. ரசாயன சாஸ்திரப்பரீட்சையினால் பயிர்களுக்கு வேண்டிய உணவு பதார்த்தங்களில் எது நிறைந்திருக்கிறது எது குறைவாயிருக்கிறது என்று பார்க்கக்கூடுமேயல்லாமல் ஒரு நிலத்தின் வளப்பத்தைப்பற்றி பூராவாகவும் அபிப்பிராயம் சொல்லுவது சாத்தியமில்லை. எல்லா விதமான மண்ணையும் ஒரே விதமாய்ப் பரீட்சை செய்வதில்லை சிலவற்றைப் பயிருணவுக்காகவும் சிலவற்றை வடிகால் சம்பந்தமாயும் சமயோசிதமாய் பரிசோதிக்கப்படும் மேலும் பரிசோதிக்கும் மண் வயலை உத்தேசித்து மிகச்சொற்பமாயிருப்பதினால் இந்த மண்ணை கொஞ்சம் கவனத்துடன் எடுத்தனுப்பவேண்டும். நிலத்தின் ஒரு மூலையில் நல்ல மண்ணும் மற்றொரு மூலையில் கெட்டமண்ணும் இருக்கலாம். இவைகளை மாத்திரம் எடுத்தனுப்பினால் பூராநிலத்தின் சராசரி மாதிரியாயிருக்க சரா சரியான மண் எடுப்பதற்குப் பின் சொல்லியிருக்கும் முறையை அனுசரித்தால் நல்லது.

வயலின் நாலாபக்கத்திலும் சுமார் 13 இடங்களில் மேலேயிருக்கும் புல்லைச் செதுக்கிவிட்டு எட்டு அல்லது ஒன்பது அங்குல ஆழம் நேராக மண்ணை வெட்டி எல்லா மண்ணையும் ஒன்றாய்க்கலந்து வெய்யிலில் காயப்போடவேண்டும். நன்றாய்க்காய்ந்த பிறகு மறுபடியும் கலந்த மண்ணில் 5 ராத்தல் இடைக்குக்குறையாமல் ஒரு துணிப்பையில் தைத்து ஒரு கோணிப்பையில் மறுபடி தைத்து சரியான லேபில் எழுதி உள்ளேவைத்து கோயமுத்தூர் அக்ரிகல்சரல் காலேஜ் லாலிரோட் போஸ்டு கவர்ன்மெண்டு அக்ரிகல்சரல் கெமிஸ்டு அவர்களுக்கு அனுப்ப வேண்டும். அதே காலத்தில் பரீட்சைக்கு மண் அனுப்பியிருப்பதாக கடிதம் எழுதியனுப்பவேண்டும். அந்தக்கடிதத்தில் அடியிற்கண்ட விபரங்கள் தெரியப்படுத்தவேண்டும்:—

(தொடரும்.)

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. Rao Sahib C. R. Lakshmivaraha Ayyangar, B.A., B.L., & Mr. R. Srinivasa Ayyangar, B.A., for The Agricultural Association, No. 5, Cutchery Road, Kumbakonam.